**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. | .. | ) |
| Miscellaneous | .. | .. | ) |
| Preliminary Register | .. | .. | ) **Sessions Case No. 52/2023** |
| Sessions | .. | .. | ) |

Deposition of witness for PW.

{ **Prosecution PW7**
{ Defence
{ Court

| | | |
|---|---|---|
| Name | : | விஜயசங்கர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரி ஆஜர் இல்லை, 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **3rd day of February 2026.**

முதல் விசாரணை **:** நான் சாத்தூர் வன்னிமடையில் குடியிருந்து வருகிறேன். நென்மேனி பஞ்சாயத்தில் கிளார்க்காக பணி செய்து வருகிறேன். கடந்த 22.08.2022 ம் தேதி இரவு சுமார் 9 மணிக்கு பஞ்சாயத்து தலைவி வேலம்மாள்

என்பவரின் வீட்டின் முன்பிருந்த பஞ்சாயத்துக்கு சொந்தமான தெருக்குழாயை பெரியசாமி என்பவர் அடித்து உடைத்துவிட்டதாகவும், பெரியசாமி மீது பஞ்சாயத்து தலைவி இருக்கன்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாகவும் சொன்னார். மேற்படி எதிரி பெரியசாமி சேதப்படுத்திய தெருக்குழாயின் மதிப்பு ரூ.1000/- இருக்கும். நான் வழங்கிய சேதமதிப்பு சான்றிதழ் அ**.**த**.**சா**.**ஆ**.7**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

உங்களால் வழங்கப்பட்ட சேதமதிப்பு சான்றான அ.த.சா.ஆ.7 பிளம்பரின் மூலமாகவோ ஹார்டுவேர் மூலமாகவோ பில்கள் வழங்கப்பட்டது என்றால் - சரிதான். உங்களால் வழங்கப்பட்ட சேதமதிப்பு சான்றான அ.த.சா.ஆ.7 ஆனது தனிப்பட்டு உங்களால் வழங்கப்படும வழங்கவில்லை என்றும் பஞ்சாயத்தின் லெட்டர்பேடில்தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் - சரிதான். உங்களால் வழங்கப்பட்ட சேதமதிப்பு சான்றான அ.த.சா.ஆ.7 ஆனது பஞ்சாயத்து தலைவருடையது என்றால் - சரிதான். உங்களால் வழங்கப்பட்ட சேதமதிப்பு சான்றான அ.த.சா.ஆ.7 ஆவனத்துடன் சேதத்துடன் காட்டக்கூடிய புகைப்படம் இணைத்து வழங்கப்படவில்லை என்றால் - சரிதான். நீங்கள் உங்களது பஞ்சாயத்து தலைவர் கேட்டுக்கொண்டதன்கிணங்க சேதமதிப்பு சான்று வழங்கி பொய்சாட்சியம் சொல்கிறீர்கள் என்றுசொன்னால் -சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**